# டெங்குக் கட்டுப்பாடு

## சித்திரக்கதைப்புத்தகம்



யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்

மூளாய், சுழிபுரம்.

LIBRARY
No. S. 775
CHULIPURAM



# அதிபரின் செய்தி

எமது வித்தியாலய மாணவர்கள், ஆசிரியர்கள் இணைந்து டெங்கு தவிர்ப்புப் போட்டியில் பிராந்திய, மாவட்ட மட்டங்களில் முதலிடம் பெற்றமை மகிழ்ச்சிக்குரியதும் ஆரோக்கியமானது மாகும். அதன் தொடர்ச்சியாக எடுத்த பல முன்னேற்றகரமான நடவடிக்கைகளில் சித்திரக் கதை மூலம் மாணவருக்கு விழிப்புணர் வூட்டுமுகமாக இந்நூலை வெளியிடுவதில் மகிழ்ச்சியுறுவதுடன் இவ் வெளியீடு உருவாக உழைத்த அனைவருக்கும் நன்றிகளை யும் சமர்ப்பிக்கின்றேன். இந்நூல் டெங்கு ஒழிப்பில் சிறுவர்களும் அதிக ஈடுபாடு காட்ட உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கையில் டெங்கு பரவாதிருக்கப் பாடுபடுவோமாக!

திருமதி.சுந்தரபாரதி சிவமலர்
அதிபர்
யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்


30.10.2017

# ஆலோசனைக் குழு

| | | |
|---|---|---|
| அதிபர் | : | திருமதி.சு.சிவமலர் |
| பிரதி அதிபர் | : | திரு.அ.இரவீந்திரன் |
| சுகாதார ஆசிரியர் | : | திரு.ம.போல் பிரதீஸ்குமார் |
| சித்திர ஆசிரியர் | : | திருமதி.ந.கனகலிங்கம் |
| விஞ்ஞான ஆசிரியர் | : | திருமதி.சி.செல்வசக்தி |




கரன் பாடசாலையில் இருந்து டெங்கு அட்டையை வீட்டுக்குக் கொண்டு சென்றான்.



வார இறுதி நாள்களில் நுளம்பு பரவும் இடங்களை அழித்தான். அட்டையில் பதிவு செய்தான்.



திங்கள் டெங்கு அட்டையை
வகுப்பாசிரியரிடம் ஒப்படைத்தான்.




வகுப்பாசிரியர் அட்டையில் ஒப்பமிட்டுப் பொதுச் சுகாதார பரிசோதகரிடமும் ஒப்பம் பெற்று மீள கரனிடம் வழங்கினார்.




**டெங்கு ஒழிப்பு தொடர்பாக சுகாதாரப் பகுதியினர் ஆட்டோ மூலம் விழிப்புணர்வுப் பரப்புரையை ஒலி பரப்பினர்.**



ஒலிபெருக்கிச் செய்தியைக் கேட்டவுடன் கலா தனது வீட்டு வளவைச் சுத்தம் செய்தாள்.



**பாடசாலையில் டெங்கு தொடர்பான சிறு விளையாட்டுக்கள் இடம் பெற்றன.**

LIBRARY
No.
CHULIPURAM



மாலதி நுளம்பு பெருகக் கூடிய இடங் களையும் பொருள்களையும் அவ் விளையாட்டில் கண்டு பிடித்துப் பரிசு பெற்றாள்.



ரவியின் பாட்டிக்கு அடிக்கடி காய்ச்சல் ஏற்பட்டது.



ரவி பாட்டியை டெங்கு பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றான்.



குமரன் காய்ச்சலால் அவதிப்பட்ட மாமாவை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றான். அங்கு வைத்தியர் மாமாவிற்கு டெங்கு எனத் தெரிவித்தார்.



குமரன் வீட்டிற்கு வந்ததும் வீட்டு அயற் பிரதேசங்களில் நீர் தேங்கும் இடங்களை இல்லாது ஒழித்தான்.



மயூரியின் சித்தப்பா வீட்டு வளவிலுள்ள எல்லாக் கழிவுப் பொருள்களையும் ஒன்றாகப் போட்டு எரித்தார். மயூரி அவ் வேளை பாடசாலையின் கழிவகற்றும் முறையை நினைத்தாள்.




மயூரி கழிவகற்றலுக்காக வகை பிரிக்கும் முறையை மாமாவிற்கும் உறவினர்களுக்கும் விளக்கினாள்.

J/Moolai San
LIBRARY
No.
CHULIPURAM

# டெங்கு தவிர்ப்போம்

இழிவான செயல்களால் இல்லமது இருண்டிடாது
அழிவான நோய்களால் உடலமது உக்கிடாது
தெளிவான அறிவாலே தெரிந்தெமது உயிரினையே
பழியாக நீக்காது பாரினையே காத்திடுவோம்.

நீரெமது நிலங்களிலும் நிலத்திலுள்ள கலங்களிலும்
பாரெமது பள்ளத்திலும் போத்தலிலும் சிரட்டையிலும்
காரெமது கழிவுநீர் வாய்க்காலிலும் தானிரப்பி
சீரெமது சூழலிலே நுளம்பதுவும் முட்டையிடும்

பாத்தியிலே நீர்சேர்த்து பலகாலம் தேங்கியங்கு
சேற்றினிலே முட்டையிட்டு குடம்பியுமே பொரித்தங்கு
வாற்பேயாய் வளர்ந்தங்கு வடிவழகாய் நீந்தியிங்கு
வீற்றிருந்து விரைந்தாள நுளம்பதுவும் வளர்ந்துவிடும்

தோட்டமதில் தாவரங்கள் பற்றிநின்று படர்ந்துவர
இட்டமுடன் நுளம்பதுவும் இனிதாக இசைத்துவர
வீட்டினுள்ளே உடுப்பதனில் உள்மறைந்து வாழ்ந்துவர
திட்டமிட்டு நோய் பரப்ப நுளம்பதுவும் பெருகிவிடும்

வேப்பிலையும் பொச்சுமது மூட்டிநாமும் விரட்டிவிட
காப்புமிக்க நுளம்புவலை கடிதெனவே கட்டிவிட
கர்ப்பூரம் கராம்பதுவும் கைமருந்தாய் எடுத்துவிட
காவுகொள் டெங்கதுவும் காததூரம் சென்றுவிடும்.

நீர்நிலையில் மீன்குஞ்சு நாமிட்டு வளர்ப்போம்
நீர்நின்று தேங்காது பொருள்களினை மீட்போம்
யாரெமது சூழலினை நோய்வராது காப்பார்
நாமெமது சூழலினை நாம்தானே காப்போம்.

திருமதி.சுந்தரபாரதி சிவமலர்
அதிபர்.

30.10.2017

---

அனுசரணை : KMK கடலுணவு நிறுவனம்,
மூளாய்.